Journal of Valartamil, eISSN 2716-5507
Volume 4, No.2, 2023, (43-52)

# பயிற்சி ஆசிரியர்களிடையே திருக்குறள் கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்

## *Thirukkural Teaching and Learning Approaches among Trainee Teachers*

***Sanjeev Raj Ganesan**
Department of Languages and Communication, Sultan Idris University University,
35900 Tanjong Malim, Perak, Malaysia

**Kingston Pal Thamburaj**
Faculty of Languages and communication, Sultan Idris Education University,
35900 Tanjong Malim, Perak, Malaysia

email: sanjevraj52099@gmail.com

**Published:** 30 December 2023

**To cite this article (APA):** Ganesan, S. R., & Pal Thamburaj, K. (2023). பயிற்சி ஆசிரியர்களிடையே திருக்குறள் கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்: Thirukkural Teaching and Learning Approaches among Trainee Teachers. *Journal of Valartamil*, *4*(2), 43–52. https://doi.org/10.37134/jvt.vol4.2.10.2024

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol4.2.10.2024

**Abstract:** The research training has been conducted exclusively for training teachers on the methodologies of learning and teaching Thirukkural. It focuses on understanding the teaching methodologies, identified through the pedagogy of Thirukkural as taught in the curriculum designed by teachers, especially in the 21st-century learning and teaching methods, and the practical application of educational technology. This research has been conducted by utilizing evaluation and quantitative methods through the routes of qualitative methods. As a result of this research, 20 seventh-semester students, including Sultan Idris Institute of Education's Tamil department, have been included. The researcher has used the findings of his research to utilize the teaching days related to Thirukkural for training the teachers. The conclusion of this research has identified that teachers have been effectively utilizing the teaching methodologies of Thirukkural to enhance students' learning. Furthermore, it has been observed that the highly effective teachers have extensively utilized the 21st-century learning and teaching method known as "Role Play" in the teaching of Thirukkural. It has also been noted that the highly effective teachers have not utilized the practical application of educational technology in the teaching of Thirukkural. Hence, it is imperative to utilize both the traditional method of teaching Thirukkural and the 21st-century learning and teaching method, along with the practical application of educational technology, to enhance the learning outcomes.

**Keyword:** training teachers, Thirukkural, educational technology

**ஆய்வுச் சுருக்கம்:** இவ்வாய்வு பயிற்சி ஆசிரியர்களிடையே திருக்குறள் கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்டது. பயிற்சி ஆசிரியர்கள் எழுதும் திருக்குறள் தொடர்பான நாள் பாடத்திட்டத்தில் கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகளைக் கண்டறிதல், பயிற்சி ஆசிரியர்கள் எழுதும் திருக்குறள் தொடர்பான நாள் பாடத்திட்டத்தில் 21-ஆம் நூற்றாண்டுக்

கற்றல் கற்பித்தல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டைப் பகுத்தாய்தல் எனும் நோக்கங்களைக் கொண்டு இவ்வாய்வு நிகழ்த்தப்பட்டது. ஆய்வாளர் ஆவணப் பகுப்பாய்வு முறையைப் பயன்படுத்தி பண்புசார் மற்றும் அளவுசார் அணுகுமுறைகளின் வழி இவ்வாய்வை மேற்கொண்டுள்ளார். இவ்வாய்வில் பயிற்றுப் பணியை முடித்த சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் பயிலும் 20 ஏழாம் பருவ மாணவர்கள் உட்படுத்தப்பட்டனர். ஆய்வாளர் தனது ஆய்வுக்கான தரவுகளைத் திரட்டப் பயிற்சி ஆசிரியர்களின் திருக்குறள் தொடர்பான நாள் பாடத்திட்டங்களைப் பயன்படுத்தியுள்ளார். இவ்வாய்வின் முடிவில் பயிற்சி ஆசிரியர்கள் திருக்குறள் கற்றல் கற்பித்தலில் மாணவர் மையக் கல்வி அணுகுமுறையைப் பயன்படுத்தியுள்ளனர் என்பது கண்டறியப்பட்டது. தொடர்ந்து, பெரும்பான்மையான பயிற்சி ஆசிரியர்கள் திருக்குறள் கற்றல் கற்பித்தலில் Role play எனும் 21-ஆம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தல் அணுகுமுறையை அதிகமாகப் பயன்படுத்தியுள்ளனர் என்பதும் பெரும்பான்மையான பயிற்சி ஆசிரியர்கள் திருக்குறள் கற்றல் கற்பித்தலில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தவில்லை என்பதும் இவ்வாய்வின் வழி கண்டறியப்பட்டுள்ளது. ஆக, விளைபயன்மிக்க திருக்குறள் கற்றல் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டுமெனில் மாணவர் மையக் கல்வி அணுகுமுறையையும் 21-ஆம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தல் அணுகுமுறையையும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்துவது அவசியமாகும்.

**குறிச்சொல்:** ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல், திருக்குறள், கல்வி தொழில்நுட்பம்

## முன்னுரை

இந்த 21-ஆம் நூற்றாண்டில் அறிவியல் துறை பரிணாம வளர்ச்சிக் கண்டு வருகிறது. இவ்வேளையில் கற்றல் கற்பித்தலில் மாற்றம் கொண்டுவருவது மிகவும் அவசியமானது. தமிழ்க்கல்வி குருகுலத்திலிருந்து திண்ணைக்குச் சென்று, பின்னர் பள்ளிக்கூடத்திலிருந்து இன்று இணையம் வரை சென்று பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. இது காலம் மாறி வருவதன் வெளிப்பாடு ஆகும். மனிதர்களும் அவர்களின் பழக்க வழக்கங்களும் மாறி வருகின்றன. அதிலும் மாணவர்களின் போக்கும் மனநிலையும் மாற்றம் கண்டு

வருகின்றன. இதற்கு இணையாகக் கற்றல் கற்பித்தலும் மாற்றம் கண்டு வருகிறது (Ilangkumaran.S 2022).

மலேசிய தமிழ்மொழிக் கலைத்திட்டம், மொழித் திறன்களில் கேட்டல் பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது. இவற்றோடு செய்யுளுக்கும் இலக்கணத்திற்கும் கூட முக்கியத்துவம் அளிக்கப்பட்டுக் கட்டமைக்கப்பட்டுள்ளது (DSKP, 2018). இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய இலக்கியங்களை இன்றையகாலத்தில் மாணவர்களுக்குக் கற்பிக்க பழமையான கற்றல் கற்பித்தல் உத்திகளைப் பின்பற்றுதல் இக்காலத்திற்கு ஏற்புடையதன்று. எனவே, தமிழ்மொழி இலக்கியக் கூறுகளில் ஒன்றான திருக்குறளைத் தற்கால மாணவர்களுக்குக் கற்பிக்க புதிய அணுகுமுறைகளைப் பயன்படுத்துவது அவசியமான ஒன்றாகும். இன்றைய காலத்தில் பள்ளியில் பழைய ஆசிரியர்கள்தான் இருக்கின்றனர். அவர்கள் பழமையான கற்றல் கற்பித்தல் முறைகளையே பயன்படுத்தி பயிற்றுவிக்கின்றனர். 21-ஆம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தலுக்கு ஏற்ப பாடத்தைக் கொண்டு செல்ல கல்விக் கூடங்களில் பயிலும் புதிய ஆசிரியர்களே பயிற்சியளிக்கப்படுகின்றனர் (Manonmani Devi. A 2020). எனவே, பயிற்சி ஆசிரியர்கள் திருக்குறளைக் கற்பிக்கப் பயன்படுத்தும் அணுகுமுறைகளை மையமாகக்கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆய்விலக்கிய மீள்நோக்கு

ஆய்வுத் தலைப்புக்குத் தொடர்பான முந்தைய ஆய்வுகள் ஆய்வாளர் ஆய்வினை மேற்கொள்ள துணைபுரிந்துள்ளன. இந்த ஆய்வில் ஆய்வாளர் தேர்ந்தெடுத்துள்ள பொருள் (திருக்குறள்), பயிற்சி ஆசிரியர்கள், நாள் பாடத்திட்டம் தொடர்பாக முன்பு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் ஆராயப்பட்டு விளக்கப்பப்பட்டுள்ளன.

## முந்தைய ஆய்வுகள்

கார்த்திகேஸ் பொன்னையா, இளங்குமரன் சிவநாதன், முனீஸ்வரன் குமார், புவனேஸ்வரன் நடராஜன், ஐகுல் அக்ஹ்மெடொவா ஆகியோர் இணைந்து திருக்குறள் கற்றல் கற்பித்தலில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை (ICT) 2021-ஆம் ஆண்டு

ஆராய்துள்ளனர். இந்த ஆய்வு திருக்குறள் கற்றல் கற்பித்தலில் ICT இன் பயன்பாட்டைப் பகுப்பாய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உலகமயமாக்கலின் இந்தச் சகாப்தத்தில், 21-ஆம் நூற்றாண்டின் கற்றல் கற்பித்தல் மாணவர்களுக்கு மிகவும் முக்கியமானது. திருக்குறள் கற்பித்தல் மற்றும் கற்றலில் ICT-ஐ பயன்படுத்துவது மாணவர்களின் அன்றாட வாழ்வில் புரிந்துணர்வையும் பொருந்தக்கூடிய தன்மையையும் மேம்படுத்தும் என்பதனை ஆராய இவ்வாய்வு உதவுகிறது. ICT தளங்கள் உயர்நிலை சிந்தனை திறன் கொண்ட மாணவர்களை உருவாக்குகின்றன. இந்த ஆராய்ச்சியில் TPACK கோட்பாடு பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வு பண்புசார் அணுகுமுறையைப் பயன்படுத்தி நடத்தப்பட்டுள்ளது. ஆராய்ச்சியாளர்கள் வினாத் தொகுதியைப் பயன்படுத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில் இருந்து தமிழ்மொழி ஆசிரியர்களுடன் நேர்காணல்களை நடத்தி இவ்வாய்விற்கான தரவுகளைச் சேகரித்துள்ளனர். இந்த ஆய்வின் மூலம் ICT பயன்பாடு தமிழ்மொழி ஆசிரியர்களிடையே ஆழமற்றுக் காணப்படுகிறது என்பது தெரிய வந்துள்ளது.

கிங்ஸ்டண் பால் தம்புராஜ் என்பவர் 2018-ஆம் ஆண்டு பயிற்றுப் பணியின் போது செல்லும் பயிற்சி ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை ஆராய்துள்ளார். இவ்வாய்வு பயிற்றுப் பணியின் போது பயிற்சி ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சிக்கள்களையும் அதற்கான தீர்வுகளையும் ஆராய்வதை நோக்கமாகக் கொண்டு நடத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையைப் பயன்படுத்தி நடத்தப்படுள்ளது. சுல்தான் இட்ரிஸ் கல்வியல் பல்கலைக்கழக்கத்தைச் சார்ந்த 25 பயிற்சி ஆசிரியர்களுக்குக் கருத்தறி வினா பாரம் கொடுக்கப்பட்டுத் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. பாட நேரம், மாணவர்களின் கட்டொழுங்கு, வேலைப் பழு மற்றும் வழிகாட்டி ஆசிரியர் யாவும் பயிற்சி ஆசிரியர்கள் எதிநோக்கும் சவால்களாக அமைகின்றன. பாட நேரம், மாணவர்களின் கட்டொழுங்கு, வழிகாட்டி ஆசிரியர் போன்ற சவால்களுக்குத் தீர்வு காண முடிந்துள்ளது ஆனால், பயிற்சி ஆசிரியர்களின் வேலை பழுவிற்குத் தீர்வு காணமுடியவில்லை என்பது இவ்வாய்வின் வழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

Muniiswaran Kumar, SuppiahNachiappan, Bavani VR Kumaran போன்றவர்களால் 2022-ஆம் ஆண்டு ஒரு சர்வதேச பள்ளியில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களை ஆராய்ந்தனர். ஒரு சர்வதேச தொடக்கப்

பள்ளியில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலின் போது மாணவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களை ஆராய்வதையும், ஒரு சர்வதேச தொடக்கப் பள்ளியில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை அடையாளம் காண்பதையும் நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வை ஆய்வாளர்கள் மேற்கொண்டுள்ளனர். இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையைப் பயன்படுத்தி நடத்தப்பட்டுள்ளது. ஆய்வாளர்கள் சர்வதேசப் பள்ளி தமிழாசிரியர்களின் நாள் பாடத்திட்டங்களைச் சேகரித்து ஆவணப் பகுப்பாய்வு செய்துள்ளனர். இவ்வாய்வின் வழி திட்டமிடப்படாத நாள் பாடத்திட்டங்கள், தெளிவற்ற உள்ளடக்கம் மற்றும் பொருத்தமற்ற பாட நோக்கங்கள் ஆகியவை ஆவண பகுப்பாய்விலிருந்து தமிழ்மொழி கற்றல் கற்பித்தல் சிக்கல்களாகக் கண்டறியப்பட்டுள்ளன. ஆய்வாளர்களின் இந்த ஆய்வு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதை பரிந்துரைக்கிறது.

## ஆய்வு நெறிமுறை


இவ்வாய்வில் ஆய்வாளர் கலப்பு அணுகுமுறையைப் பயன்படுத்தியுள்ளார். அதாவது இவ்வாய்வில் பண்புசார் அணுகுமுறையும் அளவுசார் அணுகுமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வாளர் பயிற்சி ஆசிரியர்களின் நாள் பாடத்திட்டதிலிருந்து முதலில் பண்புசார் அணுகுமுறையின் வழி தரவுகளைச் சேகரித்துள்ளார் பின்னர், சேகரிக்கப்பட்ட தரவுகளை அட்டவணையிலும் குறிவரைவுகளிலும் காண்பித்து அளவுசார் முறையில் விளக்கியுள்ளார். இவ்வாய்வில் சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையைச் சார்ந்த 20 முதலாம் பயிற்றுப் பணியை முடித்த பருவம் 7 மாணவர்கள் உட்படுத்தப்பட்டனர். ஆய்வாளர் அவர்களிடமிருந்து திருக்குறள் தொடர்பான நாள் பாடத்திட்டத்தைப் பெற்றுக்கொண்டு இவ்வாய்வினை மேற்கொண்டார். பயிற்சி ஆசிரியர்கள் திருக்குறளைக் கற்பிக்க ஆசிரியர் மையக் கல்வியைப் பயன்படுத்துகின்றனரா அல்லது மாணவர் மையக் கல்வியைப் பயன்படுத்துகின்றனரா என்பதற்கான தரவுகள் நாள் பாடத்திட்டத்திலிருந்து சேகரிக்கப்பட்டன. மேலும், பயிற்சி ஆசிரியர்கள் திருக்குறளைக் கற்பிக்கப் பயன்படுத்தும் 21-ஆம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகளும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் பயன்பாடுகளும் ஏற்புடையதாக

உள்ளதா என்பதற்கான தரவுகளும் நாள் பாடத்திட்டத்திலிருந்து சேகரிக்கப்பட்டன. பிறகு, அத்தரவுகள் ஆய்வாளரால் முறையே பகுப்பாய்வுச் செய்யப்பட்டன. ஆய்வாளர் ஆய்வின் இரண்டு நோக்கத்திற்கும் சேகரித்தத் தரவுகளை முறையே அட்டவணையில் குறிப்பிட்டுப் பகுப்பாய்வு செய்துள்ளார். மேலும், ஆய்வாளர் அத்தரவுகளைக் குறிவரைவுகளைப் பயன்படுத்தி பகுத்தாய்ந்துள்ளார்.

## ஆய்வுக் கண்டுபிடிப்பு

**நோக்கம் 1**

**பயிற்சி ஆசிரியர்கள் எழுதும் திருக்குறள் தொடர்பான நாள்பாடத்திட்டத்தில் கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகளைக் கண்டறிதல்**




*குறிவரைவு 4.1* பயிற்சி ஆசிரியர்கள் பயன்படுத்திய அணுகுமுறைகள்

மேற்காணும் குறிவரைவு பயிற்சி ஆசிரியர்கள் திருக்குறளைக் கற்பிக்கப் பயன்படுத்திய அணுகுமுறைகளைக் குறிக்கிறது. குறிவரைவின் படி, 75% பயிற்சி ஆசிரியர்கள் மாணவர் மையக் கல்வி அணுகுமுறையைப் பயன்படுத்தி திருக்குறளைக் கற்பித்துள்ளனர். இப்பயிற்சி ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தல் மாணவர்களைக் குழுவில் செயல்படுத்தும் வகையிலும் பாடத்தை வாழ்க்கையோடு தொடர்புப்படுத்தும் வகையிலும் மாணவர்களின் முழு ஈடுபாட்டை உறுதி செய்யும் வகையிலும் அமைந்திருந்தது. தொடர்ந்து, இக்குறிவரைவின் படி மீதமுள்ள 25% பயிற்சி ஆசிரியர்கள் திருக்குறளைக் கற்பிப்பதில் ஆசிரியர் மையக் கல்வியைப் பயன்படுதியுள்ளனர். இப்பயிற்சி ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தல் ஆசிரியரைச் சார்ந்தே அமைந்த வண்ணமாக இருந்தது.

மாணவர்களின் பங்கு குன்றியும் ஆசிரியரின் பங்கு அதிகமாகவும் இவ்வகை கற்றல் கற்பித்தலில் கண்டறியப்பட்டது. ஆகவே, பெரும்பாண்மையான பயிற்சி ஆசிரியர்கள் மாணவர் மையக் கல்வி அணுகுமுறையைப் பயன்படுத்தி திருக்குறள் கற்றல் கற்பித்தலை மேற்கொண்டுள்ளனர்.

**நோக்கம் 2**

**பயிற்சி ஆசிரியர்கள் எழுதும் திருக்குறள் தொடர்பான நாள்பாடத்திட்டத்தில் 21-ஆம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டைப் பகுத்தாய்தல்**

அட்டவணை 4.2

*பயிற்சி ஆசிரியர்கள் திருக்குறளைக் கற்பிக்கப் பயன்படுத்தும் 21-ஆம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தல் அணுகுமுறை மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்*

| எண் | 21-ஆம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தல் அணுகுமுறை | ஏற்புடைமை | தகவல் தொடர்பு தொழில்நுட்பம் (ICT) | ஏற்புடைமை |
|---|---|---|---|---|
| **த1** | Team stand and share | ஏற்புடையது | பயன்பாடு இல்லை | |
| **த2** | Team stand and share | ஏற்புடையது இல்லை | பயன்பாடு இல்லை | |
| | Role play | ஏற்புடையது | | |
| **த3** | Mix – N - Match | ஏற்புடையது | Youtube | ஏற்புடையது |
| **த4** | Stir the class | ஏற்புடையது | பயன்பாடு இல்லை | |
| **த5** | பயன்பாடு இல்லை | | பயன்பாடு இல்லை | |
| **த6** | Role play | ஏற்புடையது | Educaplay, Powerpoint | ஏற்புடையது |
| **த7** | Role play | ஏற்புடையது | Educaplay, Powerpoint | ஏற்புடையது |
| **த8** | Poison box | ஏற்புடையது | Bamboozle | ஏற்புடையது |

| | | | | |
|---|---|---|---|---|
| **த9** | Role play | ஏற்புடையது | பயன்பாடு இல்லை | |
| **த10** | Poison box | ஏற்புடையது | பயன்பாடு இல்லை | |
| **த11** | Role play, Poison box | ஏற்புடையது | பயன்பாடு இல்லை | |
| **த12** | பயன்பாடு இல்லை | | பயன்பாடு இல்லை | |
| **த13** | Fan – N - Pick | ஏற்புடையது இல்லை | பயன்பாடு இல்லை | |
| **த14** | Role play, Poison box | ஏற்புடையது | பயன்பாடு இல்லை | |
| **த15** | Three stray one stay | ஏற்புடையது | Powerpoint | ஏற்புடையது |
| **த16** | Role play | ஏற்புடையது | Powerpoint | ஏற்புடையது |
| **த17** | Role play | ஏற்புடையது | Powerpoint | ஏற்புடையது |
| **த18** | Role play, Think – Pair - Share | ஏற்புடையது | Youtube | ஏற்புடையது |
| **த19** | Role play | ஏற்புடையது | Youtube | ஏற்புடையது |
| **த20** | Mix – N - Match | ஏற்புடையது | பயன்பாடு இல்லை | |

*குறிப்பு- த = தரவாளர் / பயிற்சி ஆசிரியர்*

இவ்வாய்வின் வழி பயிற்சி ஆசிரியர்கள் திருக்குறள் கற்றல் கற்பித்தலில் Team stand and share, Role play, Mix – N- Match, Stir the class, Poison box, Fan – N – Pick, மற்றும் Three stray one stay போன்ற 21-ஆம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகளைப் பயன்படுத்தியுள்ளனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது. பயன்படுத்தப்பட்ட அனைத்து 21-ஆம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தல் அணுகுமுறகளும் திருக்குறள் கற்றல் கற்பித்தலுக்கு ஏற்புடையதாக விளங்குகின்றன.

இவற்றில் அதிகமான பயிற்சி ஆசிரியர்கள் திருக்குறளைக் கற்பிக்க Role play எனும் 21-ஆம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தல் அணுகுமுறையைப் பயன்படுத்தியுள்ளனர். சூழலை அமைத்து அதனை நடித்துக் காட்டுவதன் வழி மாணவர்களால் திருக்குறளின் பொருளை உய்த்துணர முடியும் என்பதால் இவ்வணுகுமுறையைப் பெரும்பாண்மையான பயிற்சி ஆசிரியர்கள் திருக்குறளைக் கற்பிக்கப் பயன்படுத்தியுள்ளனர்.

Journal of Valartamil, eISSN 2716-5507
Volume 4, No.2, 2023, (43-52)

தொடர்ந்து, பயிற்சி ஆசிரியர்கள் திருக்குறள் கற்றல் கற்பித்தலில் youtube, Powerpoint, Educaplay, Bamboozle போன்ற தகவல் தொடர்புத் தொழில்நுட்பச் செயலிகளைப் பயன்படுத்தியுள்ளனர். இருப்பினும் பெரும்பாண்மையான பயிற்சி ஆசிரியர்கள் திருக்குறள் கற்றல் கற்பித்தலில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பதைப் பயன்படுத்தவில்லை.

## முடிவுரை

இவ்வாய்வின் வழி பயிற்சி ஆசிரியர்களிடையே திருக்குறள் கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் ஆராயப்பட்டன. பெரும்பாண்மையான பயிற்சி ஆசிரியர்கள் திருக்குறள் கற்றல் கற்பித்தலில் மாணவர் மையக் கல்வி அணுகுமுறையைப் பயன்படுதியுள்ளனர் என்பது இவ்வாய்வின் வழி கண்டறியப்பட்டது. இவ்வாய்வின் வழி பயிற்சி ஆசிரியர்கள் திருக்குறள் கற்றல் கற்பித்தலில் Team stand and share, Role play, Mix – N- Match, Stir the class, Poison box, Fan – N – Pick, மற்றும் Three stray one stay போன்ற 21-ஆம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகளைப் பயன்படுத்தியுள்ளனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது. இதில் பெரும்பாண்மையாணோர் Role play அணுகுமுறையைப் பயன்படுத்தியுள்ளனர். பெரும்பாண்மையான பயிற்சி ஆசிரியர்கள் திருக்குறள் கற்றல் கற்பித்தலில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பதைப் பயன்படுத்தவில்லை என்பதும் இவ்வாய்வின் வழி கண்டறியப்பட்டுள்ளது. எனவே, இவ்வாய்வை ஆய்வாளர் மேற்கொண்ட நோக்கமானது நிறைவேறியது என்பது குறிப்பிடத்தக்கது.

# துணைநூற்பட்டியல்

Annamalai, Manonmani Devi, et al. "Using New Technologies to Teach English in Malaysia - Issues and Challenges." *Papers.ssrn.com*, 2019, papers.ssrn.com/sol3/papers.cfm?abstract_id=3511173.

Kartheges Ponniah, Ilangkumaran Sivanadhan. "The Use of ICT in Thirukkural Teaching and Facilitation." *Journal of Hunan University Natural Sciences*, vol. 48, no. 6, 1 July 2021, www.jonuns.com/index.php/journal/article/view/611. Accessed 29 Jan. 2024.

KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA. *DOKUMEN STANDARD KURIKULUM DAN PENTAKSIRAN*. ARAS 4-8 BLOK E9, KOMPLEKS KERAJAAN PARCEL E, 62604 PUTRAJAYA, BAHAGIAN PEMBANGUNAN KURIKULUM, 2018.

Kingston, P.T. "Challenges Faced by Practical Teachers in School [பள்ளிகளில் பயிற்சி ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்]." *Muallim Journal of Social Sciences and Humanities*, no. 1, 8 Jan. 2018, pp. 64–73, mjsshonline.com/index.php/journal/article/view/19.Accessed 29 Jan. 2024.

Muniiswaran, Kumar, et al. "FAKTOR PENYUMBANG MASALAH PENGAJARAN DAN PEMUDAHCARAAN BAHASA TAMIL DAN CARA PENYELESAIANNYA DI SEBUAH SEKOLAH RENDAH ANTARABANGSA." *Muallim Journal of Social Science and Humanities*, vol. 6, no. 1, 2 Jan. 2022, pp. 104–110, https://doi.org/10.33306/mjssh/183. Accessed 12 Jan. 2022.

SIVANADHAN, ILANGKUMARAN. "CHANGES and CHALLENGES FACING by MALAYSIA'S TAMIL SCHOOLS in TEACHING and LEARNING during MOVEMENT CONTROL in PANDEMIC OUTBREAK." *Muallim Journal of Social Science and Humanities*, 2 Apr. 2022, pp. 70–81, https://doi.org/10.33306/mjssh/195. Accessed 22 Apr. 2022.